**புதுச்சேரி அரசு**
**மாவட்ட தேர்தல் துறை**
**காரைக்கால்.**

எண்; தே.18 /2019 தேதி 21-03-2019.

## செய்திக்குறிப்பு

நாடாளுமன்ற தேர்தலையொட்டி மாதிரி தேர்தல் நடத்தை நெறிகள் அமலில் இருக்கும்பொழுது மாவட்ட தேர்தல் அதிகாரியின் அனுமதி பெற்று மட்டுமே அனைத்துவிதமான அரசியல் தொடர்பான நிகழ்ச்சிகள், கூட்டங்கள், அரசியல் ஊர்வலங்கள் நடைபெற வேண்டும். அனைத்து வகையான அரசியல் நிகழ்ச்சிகளுக்கும் 48 மணி நேரத்திற்கு முன்னதாக விண்ணப்பித்து அனுமதி பெற வேண்டும் என்பது தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல் ஆகும். குறிப்பாக தேர்தல் பிரச்சாரம் செய்வதற்காக அரசியல் கட்சிகளின் தலைவர்கள், நட்சத்திர பேச்சாளர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை அவர்களின் வருகையை 48 மணி நேரத்திற்கு முன்னதாகவே உறுதி செய்து மேற்படி நிகழ்வின் அனுமதிக்கு வரையறுக்கப்பட்ட கால அளவில் விண்ணப்பித்தல் அவசியமாகும்.

எனவே, அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள், தங்களின் அனைத்து விதமான அரசியல் பிரச்சார நிகழ்ச்சிகளுக்கு, அதுகுறித்த அனைத்து விவரங்களுடன் மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு 48 மணி நேரத்திற்கு முன் **https://suvidha.eci.gov.in** தேர்தல் ஆணையத்தின் ஆன்லைன் முகவரி மூலம் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். ஆன்லைனில் விண்ணப்பிப்பதில் ஏதேனும் சந்தேகம் இருப்பின் மாவட்ட தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தில் **suvidha** தனிப்பிரிவை 48 மணி நேரத்திற்கு முன் அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. 48 மணி நேரத்திற்கு முன் ஆன்லைன் முகவரி மூலம் விண்ணப்பிக்க தவறுபவர்களின் விண்ணப்பம் எக்காரணம் கொண்டும் அனுமதிக்க இயலாது. எனவே அரசியல் கட்சியினர் மற்றும் வேட்பாளர்கள் இதற்கு முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

( அ. விக்ரந்த ராஜா, இ.ஆ.ப.,)
மாவட்ட தேர்தல் அதிகாரி
காரைக்கால்.